# திருக்குறளில் சமுக அரசியல் –ஒரு பார்வை

**முனைவர் உ. கருப்பத்தேவன்**
உதவிப்பேராசிரியர் (ம) தலைவர் (பொ)
இலக்கியத் திறனாய்வியல்துறை, தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

**ச. சங்கர லெட்சுமி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7722

**ஆய்வுச்சுருக்கம்**

*மனிதனது வாழ்க்கை அறம், பொருள், இன்பம் வீடுபேறு என்னும் உறுதிப் பொருள்களைச் சார்ந்த வாழ்வியலாகும். அதில் நம் முன்னோர்கள் அறம் சார்ந்த வாழ்வே வாழச்சிறந்தது என்றும் அதனையே விரும்பினர். ஒவ்வொரு தனிமனிதனும் தனக்கான கடமை, சுயகட்டுப்பாடு, ஒழுக்கம் இவைகளை வரையறுத்துக் கொண்டு வாழ்தல் வேண்டும். அப்பொழுது தான் இந்தச் சமூகம் சீரிய முறையில் பண்பட்ட ஒரு சமூகமாக இயங்கும் என்றும், தனிமனிதன் ஒரு குழுவாக, மாறும் போது தான் சமூகமாக அறியப்படுகின்றது. சமுதாயத்திற்கென்று சில கடமைகள் உள்ளன. ஒவ்வொருவரும் சமுதாயத்திற்கான தங்களது கடமைகளை அறிந்து பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும். அவ்வாறு செயல்பட்டால் தான் சமுதாயத்தோடு தொடர்புடையதே அரசு, அரசோடு தொடர்புடைய சமுதாயத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்து முறையாக இயங்க வைப்பதும், மக்களை நெறிப்படுத்தவும் அதனை இயக்கும் அமைப்பாகவும் அரசு விளங்குகிறது. சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய அறநூல்கள் மக்களை நெறிப்படுத்தவது மட்டுமன்றி ஒரு சமூகம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதனையும் வழிகாட்டுவதாலும் திருக்குறள் வழி நின்று அரச மரபு மற்றும் அரச மாண்புகளைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.*

## முன்னுரை

காதல், வீரம், கொடை என்பனவற்றை பாடிய புலவர்கள் நீதி நெறிகளை மக்களிடம் எடுத்துக்கூறியக் காலத்தையே சங்கம் மருவிய காலம் அல்லது நீதிநூல்காலம் என்பர். இக்காலக்கட்டத்தில் எழுந்த நீதிநூல்களில் ஒரு சமுதாயத்தில் தனிமனிதனாவன் எவ்வாறு தனது கடமைகளை அறிந்து, பொறுப்புணர்வோடும், சமுதாயத்தோடும் இணங்கி நடந்து கொள்ள வழிகாட்டுவதை காணமுடிகிறது.

அரசு, சமுதாயத்தைக் கட்டுப்பாட்டிற்குள் முறையாக இயங்க வைப்பதோடு மக்களை நெறிப்படுத்தவும் உண்டான அமைப்பே அரசாகும். ஒரு நாட்டையும் நாட்டுமக்களையும், பாதுகாப்பதற்காகவும், பகைநாட்டினரிடம் இருந்து மக்களைப் பாதுகாப்பதும் அரசியலாகும்.

ஓர் அரசானது நாட்டையும், சமூகத்தையும் பாதுகாப்பது மட்டுமின்றி நாடு மேன்மையடைவதற்கும், வளர்ச்சிக்கும், மக்களின் முன்னேற்றத்திற்கும் பாடுபடும் அரசனது சிறப்பு, ஆட்சிமுறை, செங்கோல், நாட்டுப்பற்று, அரசியல் அறக்கருந்துகள், நீ திநெறிவழுவாத அமைச்சன், போர், படை, ஒற்றன் பற்றிய கருத்துக்களைக் திருக்குறள் வழி நின்று அரச மரபு மற்றும் அரச மாண்புகளைத் "திருக்குறளில் சமூக அரசியல்"" எனும் தலைப்பில் இக்கட்டுரை கூறுகிறது.

**அரசியல் விளக்கம்**

அரசியல் ஸ்ரீ அரசு இயல் என சொல் பிரித்து பொருள் கொள்வதால் அரசு நிர்வாகத்தை நடத்தும் முறையையே அரசியல் என்கிறோம். "ஓர் இறைமையின் கீழ் வரையறுக்கப் பெற்ற புவியியல் பகுதியிலுள்ள மக்கள் சமூகத்தின் மேலாண்மையே அரசு எனப்படும். அரசு, மக்கள் சமூகம் முழுவதுக்குமோ அல்லது குறிப்பிட்ட பகுதிக்கோ உரியதாகும்""1 என்று சமூக அறிவியல் கலைக்களஞ்சியம் விளக்கம் தருகிறது. "அரசு என்பது நாடும் குடியும் கொண்டு ஆள்வோருக்கு ஆட்சியும் அதிகாரமும் பெற்றதாகும்""2 என்கிறார் தி. முருகரத்தனம்.

**அகராதிகள் தரும் விளக்கம்**

"அரசியல் என்பது அரசு நிர்வாகத்தை நடத்தும் முறையையே அரசியல்""3 என்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி விளக்கம் தருகின்றது. மேலும் "அறநிலை இன்பம் எனப்படுவது குலமும் ஒழுக்கமும், குணமும் பருவமும் ஒத்த கன்னிகையை மணம் செய்துக் கொண்டு இல்லறத்தில் ஒழுகலாகும். மறநிலை இன்பம் எனப்படுவது ஏறு தழுவலும் வில்லொளி எய்தலும், பொருள் கொடுத்துக் கோடலும் வலிந்து கோடலும் ஆகிய நெறிமுறையோடு அமைந்த அமைப்பு அரசியல்""[4] என்று அபிதான சிந்தாமணி விளக்கம் தருகின்றது. "அரசியல் மனிதச் சமுதாயக் கோட்பாடு பற்றியது""5 என்று தமிழ்க் கலைக் களஞ்சியம் பொருள் விளக்கம் தந்துள்ளது. மேலும் "அரசியல் என்பது இராசர்"க முறை என்றும் ஆட்சிமுறை""[6] என்றும் மதுரைத் தமிழ் பேரகராதி விளக்கம் தருகின்றது.

**அரசியல் என்பற்கு அறிஞர்கள் தடும் விளக்கம்**

"அரசு என்பது குடும்பம், கிராமம் ஆகியவற்றின் ஒரு கூட்டிணைப்பு என்றும் அக்குடும்பங்களும், கிராமங்களும் முறைப்படுத்தப்பட்ட நெறியுடைய முழுமையான வாழ்க்கையைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கும்""[7] என்று அரிஸ்டாட்டில் விளக்கம் தருகிறார். ரூசோ என்பவர் "குடியரசு என்று நான் இங்கே சொல்வது சுயேட்சை அதிகாரம் அல்லது ஜனநாயகம் போன்ற ஒரு குறிப்பிட்ட ஆட்சிமுறையைப் பற்றிக் கூறவில்லை. பொது மக்களின் விருப்பத்தைச் செய்வதற்காக இயற்றப்படும் சட்டங்களைத் தழுவி நடைபெறுகின்ற ஆட்சி முறையினைப் பொதுவாகக் குறிப்பிடுவதாகக் கூறியுள்ளார்[8]. மேலும் அரசியலுக்கு விளக்கம் தர வந்த தேவநேயப் பாவாணர்" பொருளீட்ட வேண்டிய மக்களெல்லாருள்ளும் அரசன் தலை சிறந்தவனாதலாலும், மக்களெல்லாம் தத்தம் தொழில் செய்து பொருளீட்டுவதற்கு அரசனது காவல் இன்றியமையாததாலும், அரசாட்சி கூறவே அரசனும் குடிகளும் பொருளீட்டுதல் அதனுள் ஒருங்கே அடங்கும்[9] விளக்கம் தந்துள்ளார்.

"அரசு என்பது எல்லைக் கோடுகளைக் கொண்ட சமுதாயம் என்றும் அது அரசாங்கம், மக்கள் எனப் பிரிக்கப்பட்டது என்றும் சமுதாயத்தின்அனைத்துஅமைப்புகளையும் விட அதிக ஆற்றலும் சக்தியும் வாய்ந்து""[10] என பாஸ்கரன் விளக்கம் அளித்துள்ளார். மேலும் அரசு என்பது ஒரு குறிப்பிட்ட

மக்கள் அடங்கிய சமுதாயத்தைக் குறிக்கின்றது. இது வாழும் மக்களின் தேவைகளைக் குறைப்பதற்காக அந்த மக்களால் பின்பற்றப்படும் சட்டங்கள், வரிகள், கட்டுப்பாடுகள் ஆகியவை அரசாகும். அதாவது மக்கள் சமுதாயத்தில் பொதுத் தன்மைகளைக் கூறும் அரசும் அதன் செயல்பாடுகளும் அரசியல் ஆகும் என்று அனைத்து அறிஞர் பெருமக்கள் அரசியல் பற்றி விளக்கம் தற்றுள்ளனர்.

### அரசன்

பழந்தமிழ்ச் சமுகத்தில் அரசன் சமுதாயத்தை வழி நடத்துவதற்கும் மக்களுக்கு ஒரு நல்ல தலைவனாகவும், நாட்டை நல்வழிப்படுத்துவதற்கும் ஒரு வீரமிக்கத் தலைவன் தேவைப்பட்டான் அத்தலைவனை மக்கள் அரசன் என்றும், புலவர் பெருமக்கள், "ஆட்சியாளர்கள், மன்னர், இறை, இறைவன், அரசு, அரசன், வேந்தன், கோ,காவலன், புரவலன், கிழவன், பொருநன் எனப் பல பெயர்களில் குறிக்கப்படுகின்றனர்""[11] அரசனைப் பற்றித் தொல்காப்பியரும்,

**"ஆயர் வேட்டுவர் கூட உத்திப் பெயர்**
**ஆவயின் வருடங் கிழவரும் உளரே""**

என்னும் நூற்பாவால் வரும் கிழவன் என்பது அரசத்தலைவன் அரசன் என்பதைக் குறிக்கின்றது. மேலும் புறநானூற்றில்,

**"நெல்லும் உயிரன்றே நீரும் உயிர் அன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்""**

என்பதில் மோசிகீரனாரும், பண்டையக் காலத்திலிருந்து குடிமக்களும் அரசனையேச் சார்ந்தே வாழ்ந்து வந்தனர் என்றும், மக்களுக்கு உலகின் உயிராக விளங்கினான் என்று கூறுகின்றார்.

### அரசனின் இயல்பு

அரசனாவன் கடவுளுக்கு நிகராகவும் மக்களின் தந்தையாகவும் கருதப்பட்டான் அரசன் உள்நாட்டில் ஏற்படக்கூடிய குழப்பங்களை விலக்கும் திறனும் பகை நாட்டுப் படையெடுப்பினைத் தடுத்தும், எதிர்த்துப் போரிடும் வீரமும் இருக்க வேண்டும். மேலும் அரசனின் இயல்புகளாகவும் பின்வரும் குறட்பாவில் வள்ளுவரும்,

**"படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு""**

என்பதில் சிறந்தபடை, சிறந்த குடிமக்கள் அந்நாட்டு மக்களுக்குரிய உணவுப்பொருட்களை உற்பத்தி செய்து அதனை காக்கும் திறன் வரிவசூல் செய்யும் நுண்ணறிவும், சிறந்த அமைச்சனின் துணை அல்லது அண்டை நாடுகளுடன் நட்புறவுடன் பழகும் தன்மை, எதிரி நாட்டுப் பகைவர்கள் வந்து எளிதில் தாக்க முடியாத அளவிற்கு இயற்கையே அரண்களாக கொண்டு அரசாள்பவனே சிறந்த அரசன் என்று கூறுகின்றார்.

### அரசனுக்குரிய இலக்கணம்

அரசன் என்ற சொல் கோ, வேந்தன் எனக் குறிப்பிடுகின்றனர். வேந்தன் என்பது வேய்தோன் என்பதன் மரூஉ என்பர். வேந்தனாவது முடியணிதல், முடியணியும் முத்தமிழரசரையும், முடிவுடை வேந்தன் என்று கூறுவது மரபாகும். பெரும் வளமுடைய பரந்த பகுதிகளையாண்ட வேய்ந்தோர் வேந்தர் என அழைத்தனர். பண்டைய தமிழகத்தையாண்ட சேர, சோழ, பாண்டியர்களை மூவேந்தர் என்று அழைக்கப்பட்டு வந்தனர். சிற்றரசர்களை வேளிர் என்றும் அழைத்தனர். இவர்கள் சிறிய அளவிலான பரப்பையாண்ட மன்னர்களும் தங்களது திறத்தினால் பல்வேறு நிலங்களை கைப்பற்றி பேரரசராக மாறினர்.

ஒரு நாட்டை ஆட்சிபுரியக்கூடிய அரண் செறிவோடும் ஒழுக்கம் தவறாமலும் நீதி தவறாமலும் நேர்மையுடனும் நடு நிலைமையுடன் ஆட்சிபுரிய வேண்டும் என்பதைப் புறநானூற்றுப் பாடல்

**"அருளும் அன்பும் நீக்கிநீங்க நிரயம்**
**கொள்பரோடு ஒன்றாது""[15]**

என்ற பாடலடியின் மூலம் அறிலாகிறது. மேலும் வள்ளுவர்

**"அஞ்சாமை ஈகை அறிவுக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தற்(கு இயல்பு"[16]**
**"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்**
**நீங்கா நிலனாள் பவற்கு"[17]**

ஏன்னும் குறட்பாக்களின் மூலம் அச்சமின்மை, வறியவர்க்கு உதவும் கொடைக் குணம், நல்லது கெட்டதைச் சீர்தூக்கிப் பார்க்கும் அறிவு, விடாமுயற்சி, இந்நான்கு குணங்களும் அரசனிடம் குறைவின்றி இருக்க வேண்டும் என்றும் எடுத்த செயலைச் செய்துமுடிக்கும் வரை உறங்காத விழிப்புணர்வு, சிறந்த கல்வியறிவு, மனஉறுதி ஆகிய மூன்றும் இந்நிலத்தை ஆள்கின்ற மன்னனுக்கு விலகாது இருத்தல் வேண்டும் என கூறியுள்ளார்.

### அரசனின் கடமை

தன் குடிமக்களுக்குத் துன்பம் நேராமலும் பாதுகாப்பது அரசனின் தலையாயக் கடமையாகும் இதனை புறநானூற்றுப் பாடல்

**"நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே"[18]**

ஏன்று நல்லாட்சி செய்வதே வேந்தனுடைய கடமை என கூறுகின்றார். மக்களைக் காக்கவேண்டிய மன்னர்களும் அவ்வாறே வாழ்ந்து வந்தனர் என்றும் கூறப்படுகிறது.

**"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)**
**இறையென்று வைக்கப் படும்"[19]**

எனும் குறட்பாவின் மூலம் மக்களைக் காப்பாற்றும் மன்னன் இறைவனுக்கு ஒப்பானவனாகக் கருதப்படுகிறது. நீதிநெறி தவறாது நடுநிலையுடன் நின்று, தன் குடிமக்களை எவ்விதத் துன்பமுமின்றி காக்கும் அரசனை கடவுளுக்குச் சமமாகவே மக்கள் போற்றுவர் என்கிறார் வள்ளுவர்.

### அரசன் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகள்

ஆரசன் தீயவர்க்கு துணைபோவதை விட்டொழித்து விட்டு நன்மை தரக்கூடிய அரசர்களோடும், ஆன்றோர்களோடும் துணை புரிய வேண்டும் என்பதனை

**"பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன்**
**தகைமைக்கண் தங்கிற்கு உலகு"[20]**

எனும் குறட்பாவில் உயர்ந்த குணமுடைய பண்புடையவனின் பெருந்தன்மையைப் பின்பற்றி வாழ்பவனே சிறந்தவன் என்று வள்ளுவர் விளக்குகிறார்.

**"தேறினும் தேறா விடினும் அழிவின்கண்**
**தேறான் பகாஅன் விடல்"[21]**

ஒருவனை தனக்குத் துணையாகத் தெளிந்து அறிந்து கொண்டாலும் அறிந்து கொள்ளாவிடினும் தனக்கு அழிவு நேரும்பொழுது ஒரு பகைவனுடன் சேராவிட்டாலும் அவனிடமிருந்து பிரியாது நிற்க வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

### முடிவுரை

ஒரு நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாப்பாகவும் புறப்பகையிலிருந்து மக்களை பாதுகாப்பதும் அரசாகும். அவ்வாறே நாட்டை ஆட்சிபுரியக்கூடிய அரசன் செறிவோடும் ஒழுக்கம் தவறாமலும், நீதி தவறாமலும் நடுநிலைமையுடன் ஆட்சிபுரிய வேண்டும் என்று அரசனுக்குரிய இயல்புகளை வள்ளுவரின் குறட்பாக்கள் எடுத்தியம்புவதனைக் காணமுடிகின்றது.

### அடிக்குறிப்புக்கள்


1. International Encyclopaedia of Social Science, Volume 15, P.150.
2. முருகரத்தனம்.தி குறள் கூறும் இறைமாட்சி, ப.31.
3. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி தொகுதி-1, ப-651.
4. சிங்காரவேலுப்பிள்ளை, அபிதான சிந்தாமணி- ப-99
5. தமிழ்க் கலைக் களஞ்சியம் காட்லர் தொ.1. ப- 155
6. மதுரைத்தமிழ் பேரகராதி. தொகுதி-1, ப-651
7. பாஸ்கரன், கா., சமுதாயத்தத்துவம், ப.69.
8. சாமிநாத சர்மா, சமுதாய ஒப்பந்தம், ப.92
9. ஞா. தேவநேயப் பாவாணர், திருக்குறள் தமிழ் மாபுரை,ப-381
10. பாஸ்கான், கா., சமுதாயத்தத்துவம், ப-69

11. தட்சணாமூர்த்தி, ஆ., சங்க இலக்கியம் உணர்த்தும் மனிதநேயம், ப.204.
12. தொல். பொருள். நூற்பா -23
13. புறநானூறு .பா. 186
14. திருக்குறள் எண் -381
15. புறநானூறு .பா. 05
16. திருக்குறள் எண் -382
17. திருக்குறள் எண் -383
18. புறுநானூறு- 312
19. திருக்குறள்- 388
20. திருக்குறள்- 874
21. திருக்குறள்- 876

**துணைநூற்பட்டியல்**

1. காட்லர் - தமிழ்க் களஞ்சியம்,
2. சிங்காரவேலு - அபிதான சிந்தாமணி, மதுரைத் தமிழ்ப் பேராகராதி

**விளக்கம்**

1. தேவநேயப் பாவாணர் - திருக்குறள் தமிழ் மரபுரை
2. பரிமேலழகர் (உ.ஆ) - திருக்குறள்
3. புறநானூறு மூலமும் உரையும் - வர்த்தமான் பதிப்பகம்.